செ.வெ.எண்: 603 நாள்: 17.09.2019

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்கொலை முயற்சி உள்ளிட்ட ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்கொலை முயற்சி உள்ளிட்ட ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (16.09.2019) அன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் போது கறம்பக்குடி தாலுகா, சேவகன்பட்டியைச் சேர்ந்த பெரியதம்பி என்பவர் பட்டா மாற்றம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள தன்மீது மண்ணெண்னை ஊற்றி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இதுபோன்ற ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவது சட்டப்படி குற்றமாகும். எனவே அவர்மீது காவல்துறை மூலம் நடவடிக்கையில் உள்ளது.

பொது மக்களின் நியாயமான கோரிக்கை மனுக்களின் மீது தனி கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ஒவ்வொரு திங்கள் கிழமையும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொள்ளும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. இதில் பொது மக்களின் மனுக்கள் முறையாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு அந்தந்த துறை அலுவலர்கள் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு பதில் அளிக்கப்படுகிறது.

இது தவிர ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அம்மா திட்ட முகாம், ஒவ்வொரு மாதமும் கிராம பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம், மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கோட்டாட்சியர் அலுவலகங்களில் கோட்டாட்சியர் தலைமையில் மாதம் ஒரு முறை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் என பல்வேறு நிலைகளில் பொது மக்களின் குறைகளை கேட்டு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் அதிகம் கூடும் இடமான மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எளிதில் தீப்பற்றும் பொருட்களை கொண்டு வந்து அருகில் உள்ளவர்கள் உயிருக்கும், உடைமைக்கும் தீங்கு ஏற்படுத்த கூடிய வகையிலும் பொது மக்களுக்கு உயிர் பயத்தையும், மனதில் பீதியையும் ஏற்பட வழிவகை செய்கிறது.

எனவே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களில் தங்கள் தனி பிரச்சனைக்காக தற்கொலை முயற்சி மற்றும் ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மனுதாரர்கள் அளிக்கப்படும் நியாயமான மனுக்களின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடர்ந்து தனிகவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**